# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்டோபர்/நவம்பர் – 2006)

## PS 201 – இலங்கையின் அரசியல் யாப்பு வளர்ச்சியும் சுதந்திரத்திற்குப் பிந்திய அரசாங்கங்களும்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. அ. தேசியவாதம் என்றால் என்ன?

   ஆ. இலங்கையில் தேசிய இயக்கத்தில் காணப்பட்ட பண்புகளை விளக்குக.

2. பின்வரும் அரசியல்திட்ட சீர்திருத்தங்கள் இலங்கைக்கு எவ்வாறான பொறுப்பாட்சியை வழங்கியது என்பதை விளக்குக.
   அ. 1910 ஆம் ஆண்டு சீர்திருத்தம்
   ஆ. 1920 ஆம் ஆண்டு சீர்திருத்தம்

3. டொனமூர் குழுவினர் சர்வசன வாக்குரிமையை வழங்க முன்வந்த பொழுது முன்வைத்த வாதப்பிரதிவாதங்களைக் குறிப்பிடுக.

4. "சோல்பரி அரசியல்திட்டத்தில் உள்ள சிறுபான்மையோர் காப்பீடு, சிறுபான்மையோருக்கு பாதுகாப்பினை வழங்க தவறிவிட்டது" இக்கூற்றினை மதிப்பிடுக.

5. 1972 ஆம் ஆண்டு அரசியல்திட்டத்தில் பின்வருவன நடைமுறையில் பெற்ற முக்கியத்துவத்தினை ஆராய்க.
   அ. அரசகொள்கைத் தத்துவங்கள்
   ஆ. அடிப்படை உரிமைகள்

6. 1978 ஆம் ஆண்டு அரசியல்திட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களை விளக்குக.

7. அ. தமிழ்த் தேசியவாதம் என்றால் என்ன?

   ஆ. தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.

8. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.
   அ. அணிசேராக் கொள்கை
   ஆ. 1994 ஆம் ஆண்டிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேளிநாட்டுக் கொள்கை

9. இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்கு தடையாக உள்ள காரணிகளை ஆராய்க.

10. 'இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு சமஷ்டி ஆட்சிமுறை பொருத்தமானதாகும்' இக்கூற்றை பகுப்பாய்வு செய்க.